# பசுமைக்கதிர்

( ஜுலை - டிசம்பர் 2022)

வெளியீடு : வேளாண்மை அறிவியல் மையம்

கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல், வெம்பாக்கம் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.

தொலை பேசி : 04182-290551, 6384093303, மின் அஞ்சல் : kvktvmalai91@gmail.com, இணையதளம் : www.kvkthiruvannamalai.com

அலகு : 2 கதிர் : 49

## ஆசிரியர் குரல்

விவசாயச் சொந்தங்களுக்கு,

மீண்டும் பசுமைக்கதிர் வாயிலாக உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். மாறிவரும் காலநிலை பருவ மாற்றம், தொற்று நோய் தாக்கம் மற்றும் தொழில்மயமாக்கல் ஆகிய காரணங்களால் விவசாயிகள் விவசாயத்தை ஒரு தொழிலாக தொடர்வது என்பது தற்போது கேள்விக்குறியாக உள்ளது. மேலும் கொரனா, டெங்கு மற்றும் இதர தொற்று நோய்கள் பரவலால் பொது மக்கள் இயற்கை முறையில் விளைவித்த விளைபொருட்களை வாங்கி நுகர்வதை பார்க்கிறோம். தொடர்ந்து இயற்கை விவசாய முறைகளை பயன்படுத்தி விவசாயம் செய்யும் பொழுது எதிர்பார்த்த மகசூல் கிடைப்பது மட்டுமில்லாமல் நஞ்சில்லா உணவுப் பொருட்களை பொதுமக்களுக்கு வழங்கமுடியும். விவசாயத்தில் இயற்கை உத்திகளை பயன்படுத்துதன் மூலம் உற்பத்தி செலவும் குறைந்து அதிக வருமானமும் ஈட்ட முடியும். மத்திய மாநில அரசுகளும் இயற்கை விவசாயத்தை ஊக்குவிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றன. எனவே விவசாயிகள் இயற்கை வேளாண்மையை பயன்படுத்தி நஞ்சில்லா உணவையும் நோயில்லா வாழ்வையும் பெற்று வளமுடன் வாழ கேட்டுக்கொள்கிறேன். மீண்டும் சந்திப்போம்...

எஸ்.ரமேஷ், B.A.,LLB.
சிறப்பு ஆசிரியர்

## வயல் வெளி ஆய்வுத்திட்டம்

### மிளகாயில் சாறு உறுஞ்சும் பூச்சியைக் கட்டுப்படுத்தும் தொழில்நுட்பங்களை மதிப்பீடு செய்தல்



திருவண்ணாமலை மாவட்டத்தில் மிளகாய் சுமார் 1443 எக்டர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டு 2830 டன் உற்பத்தி செய்யப்படுகிறது. மிளகாய் சாகுபடியில் விவசாயிகளுக்கு சாறு உறிஞ்சும் பூச்சிகள் தாக்கம் பெரும் சவாலை எற்படுத்துகிறது. இதன் பொருட்டு வேளாண்மை அறிவியல் மையம் வயல்வெளி ஆய்வுத்திட்டத்தின் கீழ் செய்யார் வட்டம் பல்லி கிராமத்தில் 5 முன்னோடி விவசாயிகளின் வயல்களில் சாறு உறுஞ்சும் பூச்சிகளை கட்டுப்படுத்த தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் மற்றும் இந்திய தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் வெளியிட்ட தொழில்நுட்பங்கள் களஆய்வுக்கு உட்படுத்தப்பட்டது.

ஆய்வின் முடிவில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலை கழகம் பரிந்துரைத்த தொழில்நுட்பம் மூலம் சாறு உறுஞ்சும் பூச்சிகளின் சேதராம் வெகுவாக கட்டுப்படுத்தப்பட்டு மகசூல் எக்டருக்கு 252.54 குவிண்டால் கிடைப்பது உறுதி செய்யப்பட்டது. நிகர வருமானம் எக்டருக்கு ரூபாய் 278634/- வரை கிடைப்பதாக விவசாயிகள் கூறினர்.

## முதல்நிலை செயல்விளக்கங்கள்

### வாழையில் ஒருங்கிணைந்த வாடல் நோய் மேலாண்மை





திருவண்ணாமலை மாவட்டத்தில் 2682 எக்டர் பரப்பளவில் வாழை சாகுபடி செய்யப்படுகிறது. வாழை சாகுபடியில் வாடல் நோய் தாக்குதலால் விவசாயிகள் அதிக மகசூல் மற்றும் பொருளாதார இழப்பை சந்திக்கின்றனர். மேலும் நவீன நோய் மேலாண்மை யுக்திகள் பற்றிய விழிப்புணர்வின்றி அதிக இரசாயன மருந்துகளை தவறான முறையில் பயன்படுத்துகின்றனர்.

இதனால் அதிக பண விரயமும், நச்சு நிறைந்த விளைபொருட்களுமே உற்பத்தி செய்யப்படுகின்றன. இது சுற்றுச்சூழல் மற்றும் மனிதர்களுக்கு அதீத இடர்பாட்டை ஏற்படுத்துகிறது. இப்பிரச்சனைகளுக்கு தீர்வு காண வேளாண்மை அறிவியல் மையம், போளூர் வட்டாரம் சந்தவாசல் கிராமத்தில் 10 விவசாயிகளின் வயலில் முதல்நிலை செயல்விளக்கத்திடல் அமைத்து நவீன தொழில் நுட்பங்களை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்திற்கு தேவையான முக்கிய இடுபொருட்கள் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டன. செயல்விளக்கத்தின் முடிவில் வாடல் நோயின் தாக்கம் சிறப்பாக கட்டுப்படுத்தப்பட்டது. மேலும் விவசாயிகள் 18.14 சதவீதம் கூடுதல் மகசூலும், எக்டருக்கு ரூபாய் 1,03,657/- கூடுதல் இலாபம் பெற்று மகிழ்ச்சியடைந்தனர்.

## புறக்கடை கோழிகளுக்கான மர இலை கலந்த அடர்தீவனம்

புறக்கடை நாட்டுக்கோழிகளுக்கு மரஇலை உணவு கலந்த அடர்தீவனத்தின் முதல்நிலை செயல்விளக்கத்தினை செயல்படுத்தியது. மேலும் வேளாண்மை அறிவியல் மைய வளாகத்தில் கோழி தேர்வு, கையாளுதல் மற்றும் அடைகாத்தல், தீவனம், நோய் மேலாண்மை, குஞ்சு வளர்ப்பு மற்றும் மரஇலை உணவு உள்ளிட்ட கோழி வளர்ப்பு மேலாண்மை பற்றிய ஒருநாள் பயிற்சி நடத்தப்பட்டது. முதல்நிலை செயல்விளக்கத்தின் முடிவில், விவசாயிகள் தற்போது எடுக்கும் முட்டை உற்பத்தி (105 எண்கள்/கோழி/ஆண்டு) IAN, TANUVAS தொழில்நுட்பத்துடன் ஒப்பிடுகையில் அதிக முட்டை உற்பத்தியை (185 எண்ணிக்கை /கோழி/ஆண்டு) பதிவு செய்தது.



கோழியின் உடல்எடை சராசரியாக 25.53 சதவிகிதம் அதிகரிப்பு என கண்டறியப்பட்டது. மேலும் அதிக வரவு செலவு விகிதம் 2.92 என பதிவு செய்யப் பட்டது. ஒட்டு மொத்தமாக IAN, TNAUVAS உருவாக்கிய மரஇலை உணவு கலந்த அடர்தீவனம் கோழிகளுக்கு கொடுத்தன் மூலம் தடிமனான முட்டை ஓடு கொண்ட அதிக முட்டை உற்பத்தி மற்றும் விவசாயிகளின் நடைமுறையுடன் ஒப்பிடும் போது அதிக நிகர வருமானம் ரூ.7406.00 கிடைக்கப்பெற்றனர்.

## புறக்கடையில் நந்தனம் கோழி-4 வளர்ப்பு

வேளாண்மை அறிவியல் மையம், புறக்கடையில் நந்தனம் கோழி-4 வளர்ப்பு முதல்நிலை செயல்விளக்கத்தினை செயல் படுத்தியது. மேலும் அறிவியல் மையமானது நந்தனம்-4 புறக்கடை கோழி வளர்ப்பு, அறிவியல் முறையில் புறக்கடை கோழி வளர்ப்பு, தேர்வு செய்வது, கையாளுதல் மற்றும் அடைகாத்தல், தீவனம், நோய் மேலாண்மை, குஞ்சு பொரித்தல் செயல் பாடு மற்றும் குஞ்சு மேலாண்மை ஆகியவற்றில் வளாகத்திற்கு உள்ளேயும் வெளியேயும் 3 நாள் பயிற்சிகள் நடத்தின.



வேளாண்மை அறிவியல் மைய தொழில் நுட்பத்தின் விளைவாக, விவாசாயிகளுக்கு நல்ல வருவாய் கிடைத்தது. 20+5 எண்கள் கொண்ட நந்தனம் கோழி-4 உடன் புறக்கடை கோழி வளர்ப்பு மற்றும் மேம்படுத்தப்பட்ட வளர்ப்பு தொழில் நுட்பங்களுடன் விவசாயிகள் ரூ. 34,000/ஆண்டுக்கு கோழி வளர்ப்பின் மூலம் அதிக வருமானம் பெற்றனர். திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம் தென்சேந்தமங்களம் கிராமத்தில் சுமார் 58 பண்ணை குடும்பங்கள் கொல்லைப்புற நிலையில் நந்தனம் கோழி-4 கோழியை வளர்த்து வருகின்றனர். மாவட்டம் முழுவதும் 350க்கும் மேற்பட்ட விவசாயிகள் கொல்லைப்புற நிலையில் நந்தனம் கோழி-4 கோழியை வளர்த்து வருகின்றனர்.

## நிலக்கடலையில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம்

தொகுப்பு முதல்நிலை செயல் விளக்கத்திட்டத்தின் கீழ் 2022-23 ஆம் ஆண்டு காரிப் பருவத்தில் சேத்பட் வட்டம் ராந்தம் கிராமத்தில் 50 விவசாயிகளுக்கு நிலக்கடலை புதிய இரகமான கதிரி லெபாக்சி அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 20 எக்டர் நிலப்பரப்பில் விவசாயிகள் புதிய நிலக்கடலை இரகத்தினை சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 33.36 குவிண்டால் மகசூல் மற்றும் நிகர லாபமாக ரூ. 171,925/எக்டர் மற்றும் வரவு செலவு விகிதம் 3.79 பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.







## உளுந்தில் தொகுப்பு முதல்நிலை செயல்விளக்கம்



இந்திய உணவு பாதுகாப்பு திட்டத்தின் கீழ் உளுந்தில் தொகுப்பு முதல்நிலை செயல் விளக்கம் 2022-23 ஆம் ஆண்டு காரிப் பருவத்தில் கீழ்பென்னாத்தூர் வட்டம் காட்டுமலையனூர் மற்றும் எஸ்.பள்ளம் கிராமத்தில் 75 முன்னோடி விவசாயிகளுக்கு உயர்விளைச்சல் தரும் புதிய உளுந்து இரகம் வம்பன்-8 (VBN-8) அறிமுகம் செய்யப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் சுமார் 30 எக்டர் நிலப்பரப்பில் விவசாயிகள் புதிய உளுந்து இரகத்தினை சாகுபடி செய்தனர். இத்திட்டத்தின் பயனாக ஒரு எக்டருக்கு 8.52 குவிண்டால் மகசூல் மற்றும் நிகர லாபமாக ரூ. 34,310/எக்டர் மற்றும் வரவு செலவு விகிதம் 2.36 பெற்று விவசாயிகள் பயன்பெற்றனர்.




மின்னஞ்சல் : kvktvmalai91@gmail.com, Phone: 04182-290551, +916384093303

## விரிவாக்க செயல்பாடுகள்

### விவசாயிகள் விஞ்ஞானிகள் சந்திப்பு



வேளாண் அறிவியல் மையம், திருவண்ணாமலை மாவட்டம் கீழ்நெல்லியில் 92வது இந்திய வேளாண் ஆராய்ச்சி கழக நிறுவன நாள் 16-07-2022 அன்று கொண்டாட்டப் பட்டது. அதில் விவசாயிகள், விஞ்ஞானிகள் கலந்துரையாடல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் இந்தியாவின் மாண்புமிகு விவசாயத்துறை அமைச்சர் அவர்கள் காணொலி வாயிலாக இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம், மாநில வாரியாக செயலாற்றிய வெற்றியின் விபரங்களை விவசாயிகளிடையே பகிர்ந்து கொண்டார்.

மேலும் வரும் காலங்களில் விவசாயத்தில் கடைபிடிக்க வேண்டிய இயற்கை வேளாண்மை உத்திகள் குறித்து விவசாயிகளுடன் கலந்துரையாடினார். இந்நிகழ்ச்சியில் விவசாயிகளிடையே விவசாயத்தில் இரட்டிப்பு வருமானம் பெற கடைபுடிக்க வேண்டிய நவீன உத்திகள் மற்றும் அதன் முக்கியத்துவம், இயற்கை விவசாயத்தில் விவசாயிகள் கடைபிடிக்க வேண்டிய உத்திகள், நிலக்கடலையில் மதிப்பு கூட்டுதல் பற்றியும் அதில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு உள்ள சந்தை நிலவரம் பற்றியும் கலந்துரையாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 81 விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### வாழ்ந்து காட்டுவோம் பயிற்சிகள்





காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஊரக புத்தாக்கத் திட்டம் மற்றும் வேளாண்மை அறிவியல் மையம் இணைந்து கால்நடை பராமரிப்பு, காய்கறி சாகுபடி தொழில்நுட்பங்கள் சம்பந்தமாக 3 நாள் பயிற்சி 22.09.20222 முதல் 24.09.2022 வரையிலும் 21.12.2022 முதல் 23.12.2022 வரையிலும் நடத்தியது. சமுதாய பண்ணைப்பள்ளி பயிற்றுநர்களுக்கான இப்பயிற்சியில் கன்று தேர்வு செய்தல் முதல் பால் உற்பத்தி, தீவன வளர்ப்பு மற்றும் பாலில் மதிப்பு கூட்டுதல் செய்முறை வரை விளக்கத்துடன் பயிற்சி அளிக்கப்பட்டது. இப்பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் பயிற்சி சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. பயிற்சிகளில் தாமல், கீழம்பி, அவலூர், புத்தேரி கிராமங்களைச் சேர்ந்த 60 சமுதாய பண்ணைப்பள்ளி பயிற்றுநர்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

### தேசிய ஊட்டச்சத்து பிரச்சாரம்



தேசிய ஊட்டச்சத்து மாத பிரச்சாரம் அறிவியல் மையம் சார்பாக செப்டம்பர் 17, 28 மற்றும் 29 ஆம் தினங்களில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம், திருவண்ணாமலை, இந்திய உழவர் உர கூட்டுறவு நிறுவனம் மற்றும் ஐசிஐசிஐ பவுண்டேசன் இணைந்து விவசாயிகள், அங்கன்வாடி பணியாளர்கள், கல்லூரி மாணவ மாணவிகளுக்கான ஊட்டச்சத்து மாதத்தின் விழிப்புணர்வு நிகழ்ச்சியாக வீட்டு காய்கறித்தோட்டம் பற்றியும், குழந்தைகள், பெண்களுக்கான ஊட்டச்சத்துக் கள் வழங்கும் முறை பற்றிய திறன் மேம்பாட்டுப்பயிற்சியை ராந்தம், புதுப்பாளையம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டத்தின் பல்வேறு கிராமங்களில் நடத்தின.

இம்முகாமில் திருவண்ணாமலை மாவட்ட ஒருங்கிணைந்த் குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் திரு. கந்தன் வெம்பாக்க வட்டார திட்ட அதிகாரி திருமதி. கண்ணகி, இப்கோ களஅலுவலர் திரு.சுரேஷ், வேளாண்மை அலுவலர் செல்வி ரேணுகாதேவி, ஐசிஐசிஐ பவுண்டேசன் திரு சதிஷ் மற்றும் இந்தோ அமெரிக்கன் கல்லூரி நுண்ணுயிரியல் துறை தலைவர் திரு. தேவநாதன் ஆகியோர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். பயிற்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் காய்கறி விதைப்பைகள், மருத்துவ குணம் கொண்ட 122 செடிகள் இலவசமாக வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் 50 மரக்கன்றுகள் விவசாயிகளால் நடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் 219 பேர் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

### உலக உணவு தினம்

செய்யாறு பெண்கள் உயர்நிலை பள்ளியில் 16.10.2022 அன்று வேளாண் அறிவியல் மையம் சார்பாக உலக உணவு தினம் அனுசரிக்கப்பட்டது. இந்நிழ்வில் எதிர்காலத்தில் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு பாதுகாப்பான உணவு என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் பாரம்பரிய அரிசியின் முக்கியத்துவம், சிறுதானயம் சார்ந்த உணவகள், உணவு பாதுகாப்பு மற்றும் உணவு தரநிலைகள் பற்றிய கருத்துக்கள் எடுத்துரைக்கப்பட்டது. இவ்விழாவில் 96 நபர்கள் கலந்து கொண்டனர்.

### வயல்விழா - பனாமா வாடல் நோய்



போளூர் வட்டம் சந்தவாசல் கிராமத்தில், முதல்நிலை செயல்விளக்கத்திட்டத்தின் கீழ் வாழையில் பனாமா வாடல் நோய் மேலாண்மை செயல்படுத்தப்பட்டது. இந்திட்டத்தின் கீழ் 10 முன்னோடி விவசாயிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு இடுபொருட்கள் வழங்கப்பட்டு, செயல் விளக்கங்கள் செயல்படுத்தப்பட்டன. இந்த திட்டத்தின் வயல்விழா 22.12.22 அன்று சந்தவாசல் கிராமத்தில் கொண்டாடப்பட்டது. இதில் பயனாளி விவசாயிகள் பனாமா வாடல் நோய் மேலாண்மை பற்றிய அனுபவங்களையும், அறிவியல் மையத்தின் விஞ்ஞானிகள் இந்த செயல்விளக்கம் சம்பந்தமான தொழில்நுட்ப விளக்கங்களையும் பகிர்ந்து கொண்டனர். முன்னோடி வாழை விவசாயிகள் மற்றும் பயிற்சி அலுவலர்கள் 22 பேர் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

## உலக மண் தினம்

வேளாண்மை அறிவியல் மையத்தின் சார்பாக ஆரணி வட்டம் நேத்தப்பாக்கம் கிராமத்தில் 05.12.22 அன்று உலக மண் தினம் டி.வி.எஸ் தொண்டுநிறுவனத்துடன் இணைந்து கொண்டாடப்பட்டது. இதில் 62 விவசாயிகள் கலந்து கொண்டனர். விவசாயிகளுக்கு மண் மாதிரி சேகரிப்பது குறித்த செயல்விளக்கம் அளிக்கப்பட்டு மண் மாதிரிகள் சேகரிக்கப்பட்டு மண் வள அட்டைகளும் வழங்கப்பட்டது. முகாம்களில் நமது அறிவியல் மையத்தில் தலைவர் திரு.வே.சுரேஷ், அறிவியல் மையத்தின் தொழில் நுட்ப வல்லுநர்கள் மற்றும் வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு பயிற்சியளித்தனர்.





## ஊரக இளைஞர்களுக்கான திறன் வளர்ப்பு பயிற்சி

வேளாண் அறிவியல் மையம், திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை மற்றும் மாநில வேளாண்மை மேலாண்மை மற்றும் விரிவாக்க பயிற்சி நிலையம், குடுமியான்மலை இணைந்து திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் ஊரக இளைஞர்களுக்கான 6 நாள் மண்வள பாதுகாப்பு பற்றிய பயிற்சி 19.12.22 முதல் 24.12.22 வரை நடைபெற்றது. இதில் திருவண்ணாமலை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் திரு.சி. ஹரகுமார் அவர்கள் கலந்து கொண்டு விவசாயிகளிடையே மண்வளம் குறித்து உரையாற்றினார். திருவண்ணாமலை மாவட்டம் அத்தியேந்தலில் உள்ள சிறுதானிய மகத்துவ மையத்தின் பேராசிரியர் மற்றும் தலைவர் முனைவர் ஆ.நிர்மலா குமாரி அவர்கள் மண்வளம் பேணிக்காப்பதின் முக்கியத்துவம் பற்றியும் மண்வளத்தை மேம்படுத்தும் பயிர்களின் சாகுபடி பற்றியும் சிறப்புரை ஆற்றினார்.





இதில் வெம்பாக்கம் வட்டாரத்திலிருந்து கீழ்நெல்லி, சித்தாத்தூர் மற்றும் திருவடிராயபுரம் ஆகிய கிராமங்களிலிருந்து 28 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

## சிறப்பு கால்நடை மருத்துவ முகாம்

வேளாண்மை அறிவியல் மையம், ஐ.சி.ஐ.சி.ஐ அறக்கட்டளை மற்றும் ஆவின் நிறுவனம் இணைந்து பட்டியலின மக்களுக்காக கீழ்பெண்ணாத்தூர் வட்டம் வைப்பூர் மற்றும் கடம்பை கிராமத்தில் சிறப்பு கால்நடை முகாம் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் 21.12.2022 மற்றும் 22.12.2022 அன்று நடத்தின. முகாமில் 109 விவசாயிகள் தங்களுடைய 142 காலநடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது. ஐ.சி.ஐ.சி.ஐ அறக்கட்டளை திட்ட மேலாளர் திரு.ஆசிப் இக்பால், கால்நடை மருத்துவர் திரு.ஆனந்தன் ஐ.சி.ஐ.சி.ஐ மாவட்ட அலுவலர் திரு.சதிஷ்குமார், அறிவியல் மைய தலைவர் திரு.வே.சுரேஷ், கால்நடை தொழில்நுட்ப வல்லுநர் மரு.மாயகிருஷ்ணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.





## கண்டுனர்வு சுற்றுலா

வேளாண்மை அறிவியல் மையம் சார்பாக 14.10.22 அன்று விவசாயிகளுக்கான கண்டுணர்வு சுற்றுலா ஏற்பாடு செய்யப் பட்டது. வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரை மற்றும் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோயம்பத்தூர் இணைந்து உழவர் விழாவை நடத்தியது. இவ்விழாவில் விவசாய கருத்தரங்கம் மற்றும் 150க்கும் மேற்பட்ட கண்காட்சிக்கு அரங்குகளுக்கு விவசாயிகள் அழைத்துச் செல்லப்பட்டனர். இச்சுற்றுலாவில் 25 முன்னோடி விவசாயிகள் பங்கு கொண்டு நவீன வேளாண்மை உத்திகள், புதிய வேளாண் இயந்திரங்களின் பயன்பாடு மற்றும் விஞ்ஞானிகளுடன் கலந்துரையாடி பயன் பெற்றனர்.




*****************


**சிறப்பு ஆசிரியர்**

திரு.ச.இரமேஷ், தலைவர், தமிழ்நாடு கிராம வளர்ச்சி நிறுவனம்.

**ஆசிரியர்**

திரு.வே.சுரேஷ், முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்(பொ.)

**ஆசிரியர் குழு**

திருமதி.த.மார்கரெட், தொழில் நுட்ப வல்லுநர் (மனையியல்)

திரு.ப.நாராயணன், தொழில் நுட்ப வல்லுநர் (பயிர் பாதுகாப்பு)

மரு.கா.மாயகிருஷ்ணன், தொழில் நுட்ப வல்லுநர் (கால்நடை அறிவியல்)

செல்வி.மா.ஐஸ்வர்யா, தொழில் நுட்ப வல்லுநர் (உழவியல்)

செல்வி.ம.சாந்தி, பண்ணை மேலாளர்

**நிர்வாகக் குழு**

திருமதி.ம.விஜி, அலுவலக உதவியாளர்

திரு.ஒ.சேகர், திட்ட உதவியாளர் (கணிப்பொறி)


**பெறுநர்**

திரு/திருமதி ..............................................................

..............................................................

..............................................................


**அனுப்புநர்**

முதுநிலை விஞ்ஞானி மற்றும் தலைவர்

வேளாண்மை அறிவியல் மையம்,

கீழ்நெல்லி, சித்தாத்தூர் அஞ்சல்,

வெம்பாக்கம் வட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் - 604 410.

தொலை பேசி : 04182-290551, +91-6384093303

மின் அஞ்சல் : kvktvmalai91@gmail.com

இணையதளம் : www.kvkthiruvannamalai.com